# 4 காட்டு விலங்குகளைக் காப்போம்

தொல்காப்பியர், நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு பிரிவாகப் பிரித்து நானிலம் என்று குறிப்பிட்டார். இதில் காடும் காடு சார்ந்த இடமும் முல்லையாகும். வானளாவ உயர்ந்த மரங்களும் செடிகொடிகளும் மலைகளும் காடுகளும் வற்றாது ஓடி வளம் பெருக்கும் ஆறுகளும் இயற்கை வளங்களாகும். செயற்கைப் பொருள்கள் மனிதத் தேவைகளை மட்டுமே நிறைவு செய்யும். இயற்கை கண்களை ஈர்த்துக் களிப்படையச் செய்யும்; கவலைகளை மறக்க வைக்கும்; மனித மனத்தை மாண்புறச் செய்யும். முள்ளும் புதரும் நிறைந்த, மரங்களடர்ந்த, எங்கும் இருள் சூழ்ந்த காடுகள் கண்களுக்குக் குளிர்ச்சியாய் இருப்பினும், சில பறவைகளின் ஒலியும் விலங்குகளின் ஆரவாரமும் அச்சத்தைத் தருவனவாய் இருக்கும்.



அற்பர் நட்புப்போல் அகன்று தொடங்கிய பாதைகள் செல்லச் செல்லக் குறுகி முடியும். மலர்களும் காய்களும் கனிகளும் மலிந்திருக்கும். காட்டில், துள்ளியோடும் புள்ளிமான்களைக் காணலாம். குடும்பத்துடன் குளிக்கும் யானைக் கூட்டத்தைக் காட்டாற்றின் பக்கம் பார்க்கலாம். கொடுவில்லேந்திய வேட்டைக்காரர்களின் காலடியோசை கேட்கும்

சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற இவ்வாறான விலங்குகளின் ஆரவாரம் காட்டையே நடுநடுங்கச் செய்யும். இக்காட்டு விலங்குகளைக் கொடிய விலங்குகள் என்போம்.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குக் காடும் காட்டு விலங்குகளும் காரணமாய் உள்ளன. நல்ல மழை பெய்வதற்கு உதவும் காடுகள், வீடு கட்டத் தேவைப்படும் மரங்களையும் அடுப்பெரிக்க உதவும் விறகையும் மருந்துக்குப் பயன்படும் மூலிகைகளையும் இறப்பர், கோந்து போன்ற பொருள்களையும் மக்களுக்குத் தருவதுடன் விலங்குகளுக்குப் பாதுகாப்பான வாழிடத்தையும் அவற்றின் உணவுக்குத் தேவையான தழைகள் போன்றவற்றையும் நல்குகின்றன.

இந்தியா, இலங்கை, பர்மா, சயாம், ஆபிரிக்கா முதலிய நாடுகளில் யானைக் கூட்டங்களை இயற்கையாகக் காணலாம். பிறநாடுகளில் உயிரியற் பூங்காக்களில் மக்கள் பார்ப்பதற்காக யானைகளை வளர்ப்பர். யானைக்கு நினைவாற்றல் மிகுதி. ‘தீங்கிழைத்தவரைத் தப்பாமல் தண்டிக்கும்’ என்று கூறுவர். உருவத்தில் பெரிய யானைகள் மரங்களைச் சுமந்தும் இழுத்தும் வரும். கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் இப்பணியைச் செய்ய யானைகளைப் பழக்கியுள்ளனர். மேலும் யானையின் தந்தங்கள் விலை மதிப்பற்றவை. தந்தத்தால் ஆபரணங்களும் அலங்காரப் பொருள்களும் செய்யப் பெறுகின்றன. ‘யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்’ என்ற தொடர் இதனை மெய்ப்பிக்கக் கூறப் பெற்றதே.

‘நாயைப் போன்று நன்றியுள்ளவன், சிம்மக்குரல் உடையவன், புலி போலப் பாய்பவன், பசுபோல் சாதுவானவன், நரியைப் போன்ற தந்திரம் உள்ளவன்’ என்றெல்லாம் மக்கட் பண்புகளைக் குறிக்குமிடத்து விலங்குகளை உவமை காட்டுவர். ‘பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று’ என்றும் ‘விலங்கொடு மக்களனையர்’ என்றும், ‘காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா வேலாண் முகத்த களிறு’ என்றும், ‘குன்றேறி யானைப் போர் கண்டற்றால்’ என்றும், ‘கான முயல் எய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது‘ என்றும், ‘கைவேல் களிற்றொடு போக்கி’ என்றும் விலங்குகளை வள்ளுவர் தம் குறளில் குறிப்பிட்டுள்ளார்.

யானை, புலி, காட்டுக்காளை, சிறுத்தை, பலவகைப்பட்ட

குரங்குகள், கரடி (எண்கு), கழுதைப்புலி (தீநாய்), காட்டுப்பன்றி, காட்டுநாய், கணநரி, காட்டுப்பூனை, கீரிப்பிள்ளை, எறும்பைத் தின்னும் விலங்கு வகை, பறக்கும் அணில் போன்ற விலங்குகள், பலவகையான மான்கள், காட்டுக்குதிரை முதலியன நம் காடுகளில் வாழும் விலங்குகளாகும்.

மனிதனின் ஆசைகளும் எண்ணங்களும் உணர்வுத் தேவைகளும் சில விலங்குகள் அடியோடு அழிந்து விடக் காரணமாக உள்ளன. மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும் பயிரிட நிலங்களைப் புதுப்பிக்கும் முயற்சியாலும் கொடிய விலங்குகளிடமிருந்து பயிர்வகைகளைப் பாதுகாக்க அவற்றைக் கொல்வதாலும் கொல்வதற்குக் கிடைத்த துப்பாக்கி போன்ற கருவிகளாலும் வேட்டையாடும் சட்ட ங்களை எதிர்த்துக் கிளம்பிய வேட்டைக்காரர்களாலும் காடுகளில் வாழ்ந்து வரும் பழங்குடியினராலும் விரைந்த பயண வசதிகளாலும் பல காட்டு விலங்குகள் அருகி வருகின்றன. கடந்த முந்நூறு ஆண்டுகளில் பல விலங்குகள் மறைந்துவிட்டன. மற்றவை மறையும் நிலையில் உள்ளன.

**வன விலங்குகள் நாட்டின் உடைமையாகும். இவற்றைப் பாதுகாப்பது நம் கடமை.**

**அரும்பதங்கள்**

களிப்பு - மகிழ்ச்சி
மலிந்து - மிகுதியாக
கோந்து - பசை
நல்குகின்றன - கொடுக்கின்றன
பெற்றம் - பசு
காலாழ் களர் - சேறு நிறைந்த நிலம்
புகலிடம் - சரணாலயம்
சயாம் - தாய்லாந்து

### கிரகித்தல் பயிற்சி

1. காட்டில் காணக்கூடிய காட்சிகளை எழுதுக.
2. மரத்தின் பயன்பாடுகள் எவை?
3. யானைகளைப் பற்றி கூறப்பட்டுள்ள விடயங்களைத் தருக.
4. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து மிருகங்களின் பெயர்களையும் அவற்றின் பண்புகளையும் குறிப்பிடுக.
5. விலங்குகள் அழிவதற்குக் காரணமாய் இருப்பவை எவை?
6. காட்டு வளத்தையும் வன விலங்குகளையும் நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. பாடத்தை வாசித்து, காட்டு விலங்குகளுக்கும் வீட்டு விலங்குகளுக்கும் உள்ள பண்புகள் பற்றிக் கலந்துரையாடுக.
2. இப்பாடப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குறள்களையும் அவற்றின் பொருளையும் திருக்குறள் நூலின் உதவியோடு எழுதுக.
3. 'காட்டு விலங்குகளைப் பாதுகாப்போம்' என்ற தலைப்பில் கலந்துரையாடி கட்டுரை ஒன்று எழுதுக.
4. உமக்குப் பிடித்த மிருகம் ஒன்றைக் குறிப்பிட்டு, அம்மிருகம் தொடர்பான தகவல்களைத் தேடியறிந்து அவற்றை வகுப்பில் முன்வையுங்கள்.

## பந்தி அமைப்பு

ஓர் அம்சத்தை அல்லது ஒரு விடயத்தை விரித்து விளக்குவதாய் அமைவதே பந்தி எனப்படும். அதாவது பிரதான கருத்தைப் பல வாக்கியங்கள் மூலம் விரித்துக் கூறுவது பந்தியாகும். பந்தி ஒன்றை எழுதுவதற்கு முன்,

★ குறிப்புகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

★ குறிப்புகளைக்கொண்டு வாக்கியங்களை எழுத வேண்டும்.

★ எழுதிய வாக்கியங்களை கருத்துகளுக்கேற்ப ஒழுங்குபடுத்த வேண்டும்.

உ- ம் தலைப்பு :- எமது உணவு

குறிப்புகள் :- ★ அடிப்படைத் தேவை

★ உடல் வளர்ச்சிக்கு

★ உடல் நலம் பேண

★ வாழ்வதற்கு அவசியம்

★ போசணை உணவு

★ உடல் ஆரோக்கியம்

★ நிறையுணவு

வாக்கியங்கள்:-

1. உணவு மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் பிரதானமானது.
2. உடல் வளர்ச்சிக்கும், உடல் நலம் பேணுவதற்கும் உணவு அவசியம்.
3. மனிதன் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது.
4. உண்ணும் உணவு போசணை நிறைந்ததாக இருக்க வேண்டும்.
5. உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள நிறையுணவு அவசியமாகும்.

இவ்வாக்கியங்களை கருத்துகளுக்கேற்ப ஒழுங்குபடுத்தினால் கீழுள்ளவாறு அமையும்:

உணவு மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் பிரதானமானதாகும். மனிதன் வாழ்வதற்கு உணவு இன்றியமையாததாகும். மனிதனது உடல் வளர்ச்சிக்கும் உடல் நலத்தைப் பேணுவதற்கும் உணவு அவசியமானது. எனவே, மனிதன் உண்ணும் உணவு போசணை நிறைந்ததாக இருக்க வேண்டும். உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள நிறையுணவு அவசியமாகும்.

**பயிற்சி**

*1. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பந்தியாக அமையுங்கள்:*

அ. கூட்டினுள் அடைத்தான். சாப்பிடப் பழம் கொடுத்தான்.
ஆ. கூட்டினுள் அங்கும் இங்குமாகப் பறந்தது.
இ. தோட்டத்தில் ஒரு கிளி இரையைத் தின்று கொண்டிருந்தது.
ஈ. வீட்டுக்குள் கொண்டு சென்றான்.
உ. அங்கு வந்த நாதன் கிளியைப் பிடித்தான்.
ஊ. கிளி சாப்பிடவே இல்லை. ‘கீச்கீச்’ என்று கத்திக்கொண்டேயிருந்தது.

*2. பின்வரும் தலைப்புக்களுக்குப் பொருத்தமான பந்திகளை அமைக்கப் பழகுங்கள்:*

அ. எமது சூழல்.
ஆ. புத்தாண்டுப் பிறப்பு.
இ. பறவைகள் பலவிதம்.
ஈ. கண்ணகி.
உ. மாணவர் ஒழுக்கம்.

# எழுத்துக்களின் வகைதொகையும் அவற்றின் ஒலிப்பு முறையும்

எழுத்து என்பது,
- ★ ஒலியின் வரிவடிவம்
- ★ கட்புலக் குறியீடு (கண்ணால் பார்க்கக் கூடியது)
- ★ எழுதப்படுவது
- ★ சித்திரமாக வரையப்பட்டது

என பலவாறான பொருள் விளக்கம் கூறலாம்.

**தமிழ் எழுத்துக்கள்**

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | - | 12 |
| மெய் எழுத்துக்கள் | - | 18 |
| உயிர்மெய் எழுத்துக்கள் | - | 216 |
| ஆய்த எழுத்து | - | 1 |
| மொத்தம் | = | 247 |

**தமிழில் 247 எழுத்துக்கள் உள்ளன.**

### 1. உயிர் எழுத்துக்கள் - 12

குறில் - அ, இ, உ, எ ,ஒ
நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

### 2. மெய் எழுத்துக்கள் - 18

வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

### 3. உயிர்மெய் எழுத்துக்கள்

உயிர் எழுத்துக்கள் 12
மெய் எழுத்துக்கள் 18
உயிர்மெய் எழுத்து 12 × 18 = 216

### 4. சுட்டு எழுத்துக்கள்

ஒரு பொருளை அல்லது ஒரு நபரை சுட்டிக் காட்டுவதற்காக பயன்படும் எழுத்துக்கள் சுட்டு எழுத்துக்கள் எனப்படும். அவையாவன அ, இ, உ ஆகும்.

உ- ம் - அது, இது, உது, அவர், இவர், உவர்

### 5. கிரந்த எழுத்துக்கள்

மேலே குறிப்பிட்ட எழுத்துக்களைத் தவிர தற்காலத்தில் கிரந்த எழுத்துக்களும் பயன்படுத்தப்படுகின்றன.

அவையாவன - ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ, க்ஷ

**பயிற்சி**

1. உயிர் எழுத்துக்கள் எத்தனை?
2. உயிர்க்குறில் எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?
3. உயிர்மெய் நெடில் எழுத்துக்கள் எத்தனை? அவை எவ்வாறு அமையும்?
4. சுட்டெழுத்துக்கள் எவை? அவற்றுக்கான உதாரணங்களைத் தருக.
5. கிரந்த எழுத்துக்களைக்கொண்ட சொற்களை எழுதுக.